# ST.XAVIER'S HOSTEL




## HAND BOOK

## 2024 - 2025

# ST.XAVIER'S COLLEGE

## PALAYAMKOTTAI - 627 002

**HOSTEL OFFICE**

Mail ID: xaho1936@gmail.com

# ST.XAVIER'S HOSTEL

## Administrators

Rector

Rev.Dr.S.Ignacimuthu. S.J.

Principal

Rev.Dr.U.Godwin Rufus. S.J.

Director

Rev.Fr.A.Leolin Arockiadass.S.J.

Asst. Directors

Dr.RAMESH

Mr.P.BALAGANGATHARAN

Mr.S.MAHENDRAN

Mr.M.ARUN

# HAND BOOK

# 2024 - 2025

## தினசரி கால அட்டவணை (Shift - I)

| | |
|---|---|
| 05:30 AM | - துயிலெழுதல் |
| 06:30 AM | - கத்தோலிக்க மாணவர்களுக்கு திருப்பலி |
| 07:30 AM - 08:00 AM | - காலை உணவு |
| 08:15 AM | - கல்லூரி செல்லுதல் |
| 01:30 PM - 02:15 PM | - மதிய உணவு |
| 02:00 PM - 06:30 PM | - ஓய்வு நேரம் (Students can do their outing) |
| 04:00 PM - 05:30 PM | - விளையாட்டு |
| 06:30 PM - 07:30 PM | - படிப்பு நேரம் |
| 07:30 PM - 08:15 PM | - இரவு உணவு |
| 08:30 PM | - இரவு ஜெபம் |
| 08:35 PM - 10:15 PM | - படிப்பு நேரம் |
| 10:30 PM | - துயில் கொள்ளல் |

## தினசரி கால அட்டவணை (Shift - II)

| | |
|---|---|
| 05:30 AM | - துயிலெழுதல் |
| 06:30 AM | - கத்தோலிக்க மாணவர்களுக்கு திருப்பலி |
| 07:30 AM - 08:15 AM | - காலை உணவு |
| 08:15 AM - 09:30 AM | - விளையாட்டு |
| 09:00 AM - 11:30 AM | - ஓய்வு நேரம் (Students can do their outing) |
| 11:30 AM - 12:30 PM | - படிப்பு நேரம் |
| 12:30 PM - 01:15 PM | - மதிய உணவு |
| 01:30 PM | - கல்லூரி செல்லுதல் |
| 06:45 PM - 07:30 PM | - படிப்பு நேரம் |
| 07:30 PM - 08:15 PM | - இரவு உணவு |
| 08:30 PM | - இரவு ஜெபம் |
| 08:35 PM - 10.15 PM | - படிப்பு நேரம் |
| 10:30 PM | - துயில் கொள்ளல் |

## விடுமுறை தினங்களில் கால அட்டவணை

| | |
|---|---|
| 05:30 AM | - துயிலெழுதல் |
| 06:30 AM | - கத்தோலிக்க மாணவர்களுக்கு திருப்பலி |
| 08:15 AM - 09:00 AM | - காலை உணவு |
| 08:15 AM - 09:30 AM | - விளையாட்டு |
| 09:00 AM - 06:30 PM | - ஓய்வு நேரம் (Students can do their outing) |
| 12:15 PM - 01:10 PM | - மதிய உணவு படிப்பு நேரம் |
| 06:30 PM - 07:30 PM | - படிப்பு நேரம் |
| 07:30 PM - 08:00 PM | - இரவு உணவு |
| 08:30 PM | - இரவு ஜெபம் |
| 08:35 PM - 10:15 PM | - படிப்பு நேரம் |
| 10:30 PM | - துயில் கொள்ளல் |

## ஒருங்கிணைக்கப்பட்ட கால அட்டவணை

### ஓய்வு நேரம் (Students can do their outing)

Shift - II - 09:00 AM - 12:30 PM

Shift - I - 02:00 PM - 06:30 PM

### குளியல் நேரம்

Morning - 05:30 AM - 07:30 AM

Morning - 10:00 AM - 11:00 AM

Evening - 05:30 PM - 06:15 PM

### உணவு நேரம்

Breakfast - 07:30 AM - 08:15 AM

Lunch - 12:30 PM - 02:15 PM

Supper - 07:30 PM - 08:15 PM

## 1. இல்ல நோக்கம்:

1.1. புனித சவேரியார் கல்லூரியோடு இணைந்துள்ள எமது இல்லம் வெளியூர்களிலிருந்து வந்து இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களின் வசதிக்காகவும், வளர்ச்சிக்காகவும் செயல்படுகிறது. இக்கல்லூரியை நடத்தும் இயேசு சபை நிர்வாகமே இவ்வில்லத்தையும் நடத்துகிறது.

1.2. மாணவர்கள் கல்வியில் சிறக்கவும், ஒழுக்கத்தில் உயரவும், திறமையில் வளரவும் உறுதுணை புரிவதே இவ்வில்லத்தின் குறிக்கோளாகும்.

1.3. கற்றுத் தெளியும் வாய்ப்புகளைப் பயன்படுத்துதல், விளையாட்டுக்களிலும் கலை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றல், வழிபாடுகளிலும் பிறர் நல சேவைகளிலும் ஈடுபடுதல், இல்ல விதிமுறைகளை செம்மையாக பின்பற்றுதல் ஆகியவை இல்லத்தின் நோக்கத்தை நிறைவேற்ற ஏற்ற வழி முறைகளாகும்.

## 2. இல்ல அமைப்பு மற்றும் நிர்வாகம்:

2.1. சேவியர் இல்லம்

சேவியர் கோட்டம்

இலொயோலா கோட்டம்

காந்தி கோட்டம்

நேரு கோட்டம்

எனும் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது.

2.2. இயக்குநரின் முழுப்பொறுப்பில் இல்லம் செயல்படுகிறது.

2.3. இணை இயக்குநர்களும், உதவி இயக்குநர்களும் இல்ல இயக்குநரின் பணிகளிலும் பொறுப்புகளிலும் பங்கேற்று அவருக்கு உதவி செய்கின்றனர்.

## 3. விண்ணப்பம் மற்றும் பதிவு:

3.1. கல்லூரியில் இடம் கிடைத்த பின்னரே இல்லத்தில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

3.2. ஏற்கனவே இல்லத்தில் இருந்திருந்தாலும் கூட ஒவ்வொரு ஆண்டும் புதிதாக விண்ணப்பம் செய்ய வேண்டும்.

3.3. **இரண்டு பாடங்களுக்கு மேல் தேர்ச்சி பெறாமல்** இல்லத்தில் தங்கிப் பயில வரும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது பற்றி இயக்குநரே முடிவு செய்வார்.

3.4. மாணவர் இல்லத்தில் சேர வரும் போது மாணவரின் பெற்றோர் அல்லது காப்பாளர் (பெற்றோர் இல்லையெனில்) கண்டிப்பாக உடன் இருத்தல் வேண்டும்.

3.5. தேவை ஏற்படும் போது விடுதிக் கட்டணம் மறுபரிசீலனை செய்யப்படும்.

## 4. இணையதளம்:

4.1. நமது தூய சேவியர் இல்லத்திற்கென்று www.xaho.co.in என்ற இணையதளம் செயல்படுகிறது.

4.2. மாணவர்கள் பற்றிய தகவல்கள் இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

4.3. மாணவர்களால் செலுத்தப்பட்ட உணவுக் கட்டணம் பற்றிய விவரமும் இணைதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

4.4. மாணவர்கள் பற்றிய விவரம் அறிந்து கொள்ள மாணவர்களுடைய விடுதி எண்ணை பயன்படுத்தவும்.

4.5. விடுதியில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளும், அதனைப் பற்றிய அறிவிப்புகளும் இணையதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படும்.

## 5. தங்கும்விடுதி:

5.1. மாணவர் தங்க வேண்டிய அறையை இல்ல இயக்குநரே ஒதுக்கீடு செய்வார்.

5.2. தேவைப்படும்போது மாணவரது அறையை இல்ல இயக்குநர் மாற்றலாம். மாணவர்கள் தாமாகவே தமக்குள் அறையை மாற்றிக் கொள்ள அனுமதியில்லை.

5.3. ஒரு அறையில் தேவைக்கேற்ப ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கி இருப்பர்.

5.4. ஒரு அறையைச் சார்ந்த பொருட்களை மற்ற அறைக்கு எடுத்துச் செல்லக் கூடாது.

5.5. வெளி மாணவர்களையோ (Day Scholars) வெளியாட்களையோ விருந்தினரையோ அறைக்குள் அழைத்து வர அனுமதியில்லை. அவர்களை வரவேற்பறையில் தான் சந்திக்க வேண்டும்.

5.6. படுக்கை, கொசுவலை, சாப்பாட்டுத் தட்டு, டம்ளர், குளிப்பதற்குத் தேவையான வாளி, குவளை மற்றும் குடிநீர் எடுக்கத் தேவையான குவளை ஆகியவற்றை மாணவரே கொண்டு வர வேண்டும்.

5.7. ரேடியோ, டிரான்சிஸ்டர், டேப்ரெக்கார்டர், இஸ்திரி பெட்டி, மேசை விளக்கு மற்றும் மின்சாதனங்களை அறையில் வைத்துக் கொள்ள அனுமதியில்லை.

5.8. விடுதி வளாகத்தில் **கைப்பேசி (Cell Phone)** உபயோகிப்பதற்கு ஒரு பருவத்திற்கு ரூ.300/- செலுத்தி சிறப்பு அனுமதி பெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெற்ற மாணவர்கள் **படிப்பு நேரங்களிலும் (Study Time)** இரவு 8:30 மணிக்கு பின்னரும் உணவு **அறைகளிலும் இல்லத்தில் நடைபெறும்** பொது நிகழ்ச்சிகளிலும் கைப்பேசி **(Cell Phone)** பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இதை மீறி பயன்படுத்துபவர்களின் கைப்பேசி பறிமுதல் செய்யப்படும்.

5.9. விடுதி அறைக்குள் **மடிக்கணினி (Laptop)** பயன்படுத்த விரும்புபவர்கள் **ஒரு பருவத்திற்கு ரூ.300/- செலுத்தி சிறப்பு அனுமதி** பெற வேண்டும்.

5.10. கைப்பேசி (Cell Phone), மடிக்கணினி (Laptop) போன்றவற்றை தவறாக பயன்படுத்தும் மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு விடுதியை விட்டு வெளியேற்றப்படுவர்.

5.11. உடைமைகளைப் பாதுகாக்கவும், கதவைத் தாழிடவும் தேவையான பூட்டுகளை மாணவர்களே கொண்டு வர வேண்டும். காணாமல் போகும் பொருட்களுக்கு இல்ல நிர்வாகம் பொறுப்பேற்காது.

5.12. குளிப்பதற்கு வெந்நீர் வசதியில்லை. கிணற்று நீர் ஒத்துக் கொள்ளாதவர்கள் இல்லத்தில் சேர விண்ணப்பிக்க வேண்டாம். குளிப்பதற்கென்று வெளியே செல்ல அனுமதியில்லை.

5.13. மாணவர்கள் தங்கள் அறையையும், இல்லத்தின் சுற்றுப் புறங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் மின்சாரத்தையும், தண்ணீரையும் மிகச் சிக்கமாகவும் பொறுப்பாகவும் பயன்படுத்த வேண்டும்.

## 6. உணவகம்:

6.1. இல்லத்தில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கென்று மட்டுமே இல்லத்தின் உணவகம் செயல்படுகிறது.

6.2. உணவுக்கூப்பன் முறையில் (Coupon System) உணவகம் செயல்படுகிறது. உணவுகூப்பனுடன் (Coupon) மாணவர்கள் உணவகத்திற்கு வர வேண்டும்.

6.3. உணவுக்கூப்பன் மாதத்தின் முதல் தேதிக்கு முன் வழங்கப்படும். உணவுக் கூப்பனை மிகக் கவனமாக வைத்திருத்தல் வேண்டும். தவறவிட்டால் ரூ.100/- செலுத்தி மீண்டும் வாங்க வேண்டும்.

6.4. குறிப்பிட்ட ஒரு மாதத்தில் பொதுச் செலவுகள் ஏதேனும் இருப்பின் அவை அம்மாத உணவுக் கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும்.

6.5. **இயக்குநரின் முன் அனுமதியின் பேரில் தொடர்ந்து ஆறு நாட்களும் அதற்கு மேலும் விடுப்பு எடுப்போர்க்கு மட்டும் உணவுக் கட்டணத்தில் ஒரு நாளைக்கு ரூ.50/- வீதம் குறைக்கப்படும். இயக்குநரின் முன் அனுமதியின்றி விடுப்பு எடுப்போர்க்கு உணவுக் கட்டணம் குறைப்பு இல்லை.**

6.6. **அரசு மற்றும் இதர உதவித் தொகை** பெறும் மாணவர்களும் ஒவ்வொரு மாதமும் உணவுத் தொகையைக் கட்ட வேண்டும்.

6.7. உணவுக் கட்டணத்தை நடப்பு மாதம் 5 ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும். இல்லையெனில் அடுத்த மாதத்திற்கான கூப்பன் வழங்கப்படமாட்டாது.

6.8. இல்லத்தில் சைவ உணவும், அசைவ உணவும் பரிமாறப்படும். சைவ-அசைவ உணவு மாற்றம் விரும்புவோர் நடப்பு மாதத்தின் 1-ம் தேதி இயக்குநரின் அனுமதி பெற்று மாற்றிக் கொள்ளலாம்.

6.9. மாணவர்கள் உணவுப் பொருட்களை வீணாக்குவதைத் தவிர்க்க வேண்டும்.

6.10. எந்த மாணவரும் பிறருக்கென்று உணவைத் தங்கும் அறைக்கு எடுத்துச் செல்லக் கூடாது.

6.11. முன் அனுமதியின்றி உணவக காலவரையறைக்குப் பின் அல்லது முன் வருபவர்களுக்கு உணவு வழங்கப்பட மாட்டாது.

6.12. இல்லத்தில் பணியாற்றும் பணியாளர் அனைவரிடமும் மாணவர்கள் அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும். கண்ணியமற்ற முறையில் நடப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

6.13. உணவகம் சம்மந்தப்பட்ட கருத்துக்களையும் முறையீடுகளையும் மாணவர்கள் இயக்குநர், இணை இயக்குநர், துணை இயக்குநர் ஆகியோரின் கவனத்திற்கு மட்டுமே கொண்டு வரவேண்டும்.

## 7. கல்லூரி செல்லுதல் மற்றும் விடுப்பு:

8.1. மாணவர்கள் கல்லூரிக்குத் தவறாது, தாமதமின்றிச் செல்ல வேண்டும். கல்லூரி நாட்களில் வகுப்புகளைப் புறக்கணிக்கும் மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

8.2. இயக்குநர்/இணை இயக்குநர் அனுமதியுடன் மட்டுமே விடுப்பு எடுத்துக் கொள்ளலாம்.

8.3. உடல்நலக் குறைவின் காரணமாக விடுப்பு எடுப்பவர்கள் இல்லத்தை விட்டு தகுந்த காரணமின்றியும், அனுமதியின்றியும் வெளியே செல்லக்கூடாது.

8.4. கல்லூரி செயல்படும் நாட்களிலும் மற்ற நாட்களிலும் இல்லத்திலிருந்து வீட்டிற்கோ அல்லது வேறிடங்களுக்கோ செல்ல விரும்பும் மாணவர்கள் இல்ல விண்ணப்ப படிவத்தைப் பூர்த்தி செய்து இயக்குநரின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும்.

## 9. படிப்பு நேரம்:

9.1. இல்லத்தில் படிப்பு நேரத்தை அமைதியுடன் கடைப்பிடிக்க வேண்டும்.

9.2. படிப்பு நேரத்தில் கதவு, சன்னல்களைத் திறந்து வைத்திருக்க வேண்டும். தினமும் படிப்பு நேரத்தில் ஆஜர் பட்டியல் (Roll Call) எடுக்கப்படும்.

9.3. படிப்பு நேரத்தில் பிறர் அறைகளுக்குச் செல்வதைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

9.4. கூட்டுப் படிப்பை பிற்பகல் வேளையில் மட்டுமே மேற்கொள்ளலாம்.

9.5. படிப்பு நேரத்தைப் பொழுதுபோக்கு, விளையாட்டுகளில் கழிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

9.6. படிப்பு நேரங்களில் தாமதமாக வர நேர்ந்தால் இயக்குநரின் / இணை இயக்குநரின் / துணை இயக்குநரின் அனுமதி பெற்ற பின்பே தம் அறைக்குச் செல்ல வேண்டும்.

9.7. இரவு 11:00 மணிக்கு மேல் விழித்திருந்து படிக்கும் மாணவர்கள் இயக்குநரின் அனுமதி பெற வேண்டும்.

9.8. தேர்வு நாட்களைத் தவிர பிற நாட்களில் இரவு 11 மணிக்குள் தூங்கச் செல்வது நலம் பயக்கும். அறையிலுள்ள மற்ற மாணவரின் படிப்புக்கு எந்த ஒரு இடையூறும் கொடுத்தல் கூடாது.

**<u>10. கத்தோலிக்க மாணவர்களுக்கு:</u>**

10.1.இல்லத்தில் கத்தோலிக்க மாணவர்கள் பிற மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாகவும், இறைபக்தியிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாக இருக்க வேண்டும்.

10.2. ஒவ்வொரு நாளும் காலை 6:30 மணிக்கு கல்லூரி ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் கலந்து கொள்ள வேண்டும். ஞாயிறு மற்றும் கடன் திருநாட்களில் தவறாது திருப்பலியில் பங்கு கொள்ளுதல் வேண்டும்.

10.3. மாதத்தில் முதல் புதன் கிழமையில் காலை/மாலை 6:30 மணிக்கு விடுதியில் நடைபெறும் சிறப்புத் திருப்பலியில் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும். வருகை பதிவேடு எடுக்கப்படும்.

10.4. பொது வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும், தியானத்திலும் முழு ஈடுபாட்டுடன் கலந்து கொள்ள வேண்டும்.

10.5. செவ்வாய்கிழமைதோறும் மாதா கெபியில் மாலை 8:30 மணிக்கு நடைபெறும் மாதா பிரார்த்தனையிலும் மாதத்தின் முதல் வெள்ளி மாலை 7:00 மணிக்கு கல்லூரி ஆலயத்தில் நடைபெறும் நற்கருணை ஆராதனையிலும் கலந்து கொள்ள வேண்டும்.

## 11. பொது ஒழுங்குகள்:

11.1. பல்வேறு பண்பாடுகளைக் கொண்ட மாணவர்கள் ஒருங்கிணைந்து வாழ்வதற்கு இல்ல வாழ்வு துணை புரிகிறது. மாணவர்கள் பரந்த மனப்பான்மையுடன் எல்லா மாணவர்களிடமும் நட்புறவில் வளர வேண்டும்.

11.2. படிப்பிலும், திறமையிலும், ஒழுக்கத்திலும் வளர கடினமான உழைப்பை ஒவ்வொரு மாணவரிடமும் இல்லம் எதிர்பார்க்கிறது.

11.3. வகுப்புகள் முடிந்தவுடன் மாணவர்கள் ஏதாவது விளையாட்டு ஒன்றில் கலந்து கொள்ளுதலோ அல்லது உடற்பயிற்சி செய்தலோ மிகவும் பயனுள்ளதாகும்.

11.4. இரவு 6:45 மணிக்கு மேல் இல்லத்தை விட்டு வெளியே செல்ல மாணவர்களுக்கு அனுமதி இல்லை.

11.5. இரவு உணவுக்குப் பின் படிப்பு நேரத்துக்கு முன்பு வரை மாணவர்கள் சகமாணவர்களோடு பேசி நட்புறவை வளர்க்கலாம் அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கண்டுகளிக்கலாம்.

11.6. மாலை 4:00 மணி முதல் 6:00 மணி வரை மாணவர்களை பெற்றோர் / உறவினர் / விருந்தினர் பார்வையாளர் பகுதியில் சந்திக்கலாம். படிப்பு நேரங்களில் பெற்றோர் / உறவினர் மாணவர்களைச் சந்திக்க இயக்குநர் / இணை இயக்குநர் / துணை இயக்குநர் அனுமதி பெற வேண்டும்.

11.7. இல்லத்தில் மிதிவண்டி, ஊர்திகள் வைத்துக் கொள்ள இயக்குநரின் அனுமதி பெற வேண்டும்.

11.8. பணம் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை மாணவர்கள் தமது அறையில் வைத்திருத்தல் நல்லதல்ல. பண இழப்புகளைத் தவிர்க்க மாணவர்கள் கல்லூரியில் உள்ள வங்கியைப் பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள். பணம் மற்றும் பொருள் இழப்புகளுக்கு இல்ல நிர்வாகம் பொறுப்பாகாது.

11.9. இயக்குநர் அனுமதியின்றி மாணவர்கள் கூட்டங்கள் கூட்டுவதோ, அறிக்கை இடுவதோ, பண வசூல் செய்வதோ கூடாது.

11.10. இரவு நேரங்களில் மாணவர்கள் அவரவர் அறைகளில் தான் தங்க வேண்டும். பிற அறைகளில் தூங்குவதும், சப்தமாகப் பேசி சக மாணவர்களின் படிப்பையும், தூக்கத்தையும் கெடுப்பதும் குற்றமாகும்.

11.11. புகைப்பிடித்தல், போதை மருந்து, மது அருந்துதல் மற்றும் வன்முறையில் ஈடுபடுதல் போன்ற தீய பழக்க வழக்கங்களில் ஈடுபடுவோர் இல்லத்தை விட்டு வெளியேற்றப்படுவர்.

11.12. குடிதண்ணீர் குழாய்களில் பல்துலக்கவோ, முகம், கை, கால் கழுவுதலோ கூடாது.

11.13. விண்ணப்பப் படிவம் எழுதிக் கொடுத்த பிறகே வீட்டிற்கு விடுமுறையில் செல்ல வேண்டும்.

11.14. மாலை நேரங்களில் படிப்பின் நிமித்தம் வெளியே செல்ல விரும்புபவர்கள் இல்ல இயக்குநரின் / இணை இயக்குநரின் அனுமதி பெற்று செல்லலாம். இவ்வாறு செல்பவர்கள் இரவு 8:30 மணிக்குள் கண்டிப்பாக விடுதிக்குத் திரும்பிவிட வேண்டும்.

11.15. இரவு 8:30 மணிக்கு மேல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காண அனுமதியில்லை.

11.16. உடல்நலக் குறைவோடு இருப்போரைப் பற்றி உடனே இயக்குநருக்குத் / இணை இயக்குநருக்குத் தெரிவிக்க வேண்டும். தேவைப்படுகின்ற உதவிகளுக்கு மாணவர்கள் துணை இயக்குநர்களை அணுகிப் பயன் பெறலாம்.

11.17. இல்லத்தில் உள்ள பொருட்களுக்கு மாணவர்களால் பழுது ஏற்பட்டால் பழுது பார்க்கும் செலவை அவர்களே ஏற்க வேண்டும். இல்லத்தின் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தால் மாணவர்கள் தண்டனைத் தொகையோடு அதை ஈடு செய்ய வேண்டும்.

11.18. சுவர்களில், கதவு சன்னல்களில், இல்லத்தின் இதர இடங்களில் எழுதுதல், வரைதல், கிறுக்குதல் மற்றும் சுவரொட்டி, படம் போன்றவற்றை ஒட்டுதல் தண்டனைக்குரியவை.

11.19. இல்லத்தின் விதிமுறைகளை மீறும் மாணவரை விடுதியிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு இயக்குநருக்கு அதிகாரம் உண்டு.

11.20. அனுமதியின்றி இல்லத்தை விட்டு வெளியே சென்றுவரும் மாணவர்கள் இல்லத்திலிருந்து நீக்கப்படுவர்.

11.21. இல்ல மாணவர்கள் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டால் இல்லத்திலிருந்தும் வெளியேற்றப்படுவர். வெளியேற்றப்பட்ட மாணவர் இயக்குநர் அனுமதியின்றி எக்காரணத்தைக் கொண்டும் இல்லத்தில் நுழையக்கூடாது.

11.22. இல்லத்தின் நன்மைக்காகவும் மாணவரின் நலனுக்காகவும் இயக்குநர் ஒரு மாணவனை இல்லத்திலிருந்து வெளியேற்ற அதிகாரம் உண்டு.

11.23. ஆன்மீக உள் நல காரியங்களில் வளர்ச்சி பெறும் பொருட்டு மாணவர்கள் இல்லத்தின் ஆற்றுப்படுத்துநரை (Counsellor) சந்திக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். பெற்றோர்/காப்பாளர் மாணவர்களை சந்திக்க வரும் போது இயக்குநர் மற்றும் இணை இயக்குநர்களைச் சந்தித்து மாணவர்களின் வளர்ச்சியை அறிந்து கொள்ள வேண்டும்.

11.24. உணவுக் கட்டண முன்பணம் கல்வியாண்டின் இறுதிமாத உணவுக் கட்டணத்தில் சரிக்கட்டப்படும்.

11.25. இல்லத்தில் மாணவர்கள் ஓராண்டுக்கு மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

மேற்கூறிய விதிமுறைகளைப் பின்பற்றி ஒழுக்கத்தில் உயர்ந்து, கல்வியில் சிறந்து, திறமையில் வளர்ந்து உண்மைச் சுதந்திரமும் நட்புறவும் பெற்று ஒருமனதுடன் இணைந்து வாழ மாணவர்களை வரவேற்கிறது சேவியர் இல்லம்.!